பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
**Provincial Council Complex , A9 Road, Kaithady**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


**My No**: NP/09/FRM/R2/CIR-REV/12/2018 30/10/2018

மாகாண நிதிச் சுற்றுநிருப இல : **PF /06/2016(I)**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

<u>மாகாண நிதி விதிகள் : 68-75,80,283,387 மற்றும் 429ன் பிரகாரம்,</u>
<u>இழப்புக்கள், நட்டங்களைப் பதிவழித்தல்</u>

மேற்படி விடயம் தொடர்பான, PF/06/2016 இலக்கமும் 15.11.2016 ம் திகதியும் கொண்ட மாகாண நிதிச் சுற்றுநிருபம் மற்றும் மாகாண நிதி விதிகள்: 68, 69, 70, 71, 72, 73,74, 75, 80, 283, 387மற்றும் 429இன் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபைக்குரிய சொத்துக்களிற்கு ஏற்படும் நட்டங்கள் மற்றும் இழப்புக்களுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக கீழ்வரும் மாகாண நிதி விதிகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. நட்டங்கள்

1.1 மாகாண நிதி விதி: 68ன் பிரகாரம் நட்டங்கள் என்ற விடயங்களின் அடிப்படையில் மாகாண நிதி விதி: 68.1ன் (i)-(vi) வகுதிகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் எழும் பட்சத்தில் அவை நட்டங்களாகக் கருதப்படல்வேண்டும்.

1.2 மேலும், மாகாண நிதி விதி: 69ன் பிரகாரம் நட்டங்கள் ஏற்படும் போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனையும் மாகாண நிதி விதி: 70ன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்படுவதனையும் மாகாண நிதி விதி: 71ன் பிரகாரம் நட்டத்தின் உச்ச அறவிடத்தக்க பெறுமதி தீர்மானிக்கப்படுவதனையும் மாகாண அமைச்சின் செயலாளர்களும், திணைக்களத்தலைவர்களும் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

1.3 மாகாண நிதி விதிகள்: 71, 72, 73 ன் பிரகாரம் எதிர் நோக்கப்பட்ட உரிய நட்டங்களுக்கு பின்வரும் கணக்கீட்டு முறைகள் பின்பற்றப்படல்வேண்டும்.


பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
**DEPUTY CHIEF SECRETARY**

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / කුමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 ( : 021 223 0451 ( Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet

ஆளணிப்பயிற்சி / පිරිස්පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதமஉள்ளககணக்காய்வாளர் / ප්‍රධානඅභ්‍යන්තරවිගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

1.4 மாகாண நிதி விதி: 72ன் பிரகாரம் – ஏற்பட்ட நட்டம் உடனடியாக ஈடு செய்யப்படுவது சாத்தியமற்றதாகின்ற போது முற்பணக்கணக்கின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**i.** **முற்பணக்கணக்கின் மூலம் மேற்கொள்ளப்படும் போது**

*முற்பணக் கணக்கு வரவு*
*காசுக் கணக்கு செலவு*

**ii.** **நட்டத்தின் ஒருபகுதி / முழுத் தொகை அறவிடப்படும் போது**

*காசுக் கணக்கு வரவு*
*முற்பணக் கணக்கு செலவு*

**iii.** **நட்டம் பகுதியாகவோ / முழுமையாகவோ அறவிடப்படாத போது**

*வாக்கு பணப் பேரேட்டுக் கணக்கு (விடயக் குறியீடு 1701) வரவு*
*முற்பணக் கணக்கு செலவு*

1.5 மாகாண நிதி விதி: 73ன் பிரகாரம் நட்டம் அறவிடப்படும் போது

**i.** **குறித்த வருடத்தினுள் நட்டம் அறவிடப்பட்டால்**

*காசுக் கணக்கு வரவு*
*வாக்கு பணப் பேரேட்டுக் கணக்கு (விடயக் குறியீடு 1701) செலவு*

**ii.** **முன்னைய வருடத்திற்கான நட்டம் அடுத்துவரும் வருடத்தில் அறவிடப்பட்டால்**

*காசுக் கணக்கு வரவு*
*அரசிறைக் கணக்கு (Revenue) செலவு*

**2. அரச வாகனம் ஒன்று விபத்துக்கு உள்ளாகி திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் போது**

**i.** **மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தச் செலவுக்கு கொடுப்பனவு செய்யும் போது**

*வாக்குப் பணப் பேரேட்டுக் கணக்கு ( விடயக் குறியீடு 1301) வரவு*
*காசுக் கணக்கு செலவு*

**ii.** **உரிய வாகனத்தின் திருத்தச் செலவானது குறித்த வருடத்தினுள் காப்புறுதி மூலமோ அல்லது ஏனைய முறை மூலம் ஈடுசெய்யப்படும் போது**

*காசுக் கணக்கு வரவு*
*வாக்குப் பணப் பேரேட்டுக் கணக்கு (விடயக் குறியீடு 1301) செலவு*

**iii.** **உரிய வாகனத்தின் திருத்தச்செலவானது தொடர்ந்து வரும் வருடத்தில் ஈடுசெய்யப்படும் போது**

*காசுக் கணக்கு வரவு*
*அரசிறைக் கணக்கு செலவு*

**iv.** **உரிய வாகனத்தின் திருத்தச்செலவானது ஈடு செய்யப்பட முடியாதவிடத்து (இழப்பீடாகக் கருதப்படும் போது)**

*வாக்குப் பணப் பேரேட்டுக் கணக்கு (விடயக் குறியீடு1701) வரவு*
*வாக்குப் பணப் பேரேட்டுக் கணக்கு (விடயக் குறியீடு 1301) செலவு*

மாகாண நிதி விதி: 75ன் பிரகாரம் பதிவழித்தலிற்கான கட்டளை பிறப்பிக்கப்படும் போது ஏற்பட்ட நட்டத்தின் அறவிடக்கூடிய உச்சப்பெறுமதியிலிருந்து அறவிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையினைக் கழித்து வரும் மீதிக்கு சம்பந்தப்பட்ட பதிவிலிருந்து நீக்குவதற்கான அனுமதி பெறப்படல்வேண்டும்.
மேலும் அறவிடக்கூடிய தொகைகளை மாகாண நிதி விதி: 80ன் பிரகாரம் அறவிடுவதற்கேற்ற நடைமுறைகளைத் திணைக்களத் தலைவர் மேற்கொள்ளல்வேண்டும்.

**3. உற்பத்தி வியாபார முற்பணக் கணக்குகளில் ஏற்படும் செயல்முறை நட்டங்கள் மாகாண நிதி விதி: 283**

முன்னைய வருடத்திற்கான ஒரு தற்போதைக்கான இலாப நட்டக்கணக்கை அடுத்து வரும் நிதியாண்டின் ஜனவரி மாதம் முடிய முன்னர் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**i.** கடந்த வருட நட்டம் (**தற்போதைக்கான இலாப நட்டக் கணக்கில்**) **ஏற்படும் பொழுது மதிப்பீட்டில் உள்ள நட்டத்திற்கு**

*வாக்குப் பணப் பேரேட்டுக் கணக்கு (விடயக் குறியீடு 1701) வரவு*
*பொது வைப்புக் கணக்கு (இழப்புக்களுக்கான ஏற்பாட்டு ஒதுக்கீடு) செலவு*
(அந்த ஆண்டிற்கான திறைசேரிப் புத்தகங்கள் மூடுவதற்கு முன் செய்யப்படல் வேண்டும்)

**ii.** சரியான மீதி கண்டு பிடிக்கப்பட்ட பின் சரியான தொகைக்கு

- **திணைக்களக் கணக்குகளில்**

  *பொது வைப்புக் கணக்கு (இழப்புக்களுக்கான ஏற்பாட்டு ஒதுக்கீடு) வரவு*
  *காசுக் கணக்கு செலவு*

- **முற்பண முயற்சி கணக்குகளில்**

  *காசுக் கணக்கு வரவு*
  *முயற்சிகள் இலாப நட்டக் கணக்கு செலவு*

**iii.** பொது வைப்புக் கணக்கு (**இழப்புக்களுக்கான ஏற்பாட்டு ஒதுக்கீடு) வரவு மீதியினை வெளிப்படுத்தும் போது** (ஏற்பாட்டில் ஒதுக்கப்பட்ட தொகை உள்ளபடியான நட்டத்திலும் கூடுதலாகக் காணப்படுதல்) அத்தொகை அரசிறை தலைப்பிற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

*பொது வைப்புக் கணக்கு (இழப்புக்களுக்கான ஏற்பாட்டு ஒதுக்கீடு) வரவு*
*அரசிறைக் கணக்கு செலவு*

**iv.** **பொது வைப்புக் கணக்கு (இழப்புக்கான ஏற்பாட்டு ஒதுக்கீடு) பற்று மீதியினை வெளிப்படுத்தும் போது** (ஏற்பாட்டில் ஒதுக்கப்பட்ட தொகை உள்ளபடியான நட்டத்திலும் குறைவாகக் காணப்படல்) அதனை ஈடுசெய்வதற்கு குறைநிரப்பு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

- **திணைக்களக் கணக்குகளில்**
  *வாக்குப் பணப் பேரேட்டுக் கணக்கு (விடயக் குறியீடு 1701) வரவு*
  *காசுக் கணக்கு/பொது வைப்புக் கணக்கு(இழப்புக்களுக்கான ஏற்பாட்டு ஒதுக்கீடு) செலவு*

- **முற்பண முயற்சி கணக்குகளில்**

  *காசுக் கணக்கு வரவு*

  *முயற்சிகள் இலாப நட்டக் கணக்கு செலவு*

மேற்கூறிய விடயங்களின் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பில் காலத்திற்கு காலம் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் மற்றும் மாகாண நிதி விதிகள் என்பனவும் ஏற்புடையனவாக இருக்கும்.

**அ.பத்திநாதன்,**

**பிரதம செயலாளர்**

பிரதிகள் :-

| | | |
|---|---|---|
| 1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வ.மா | - | கௌரவ ஆளுநர் அவர்களிற்கு அறியத்தருவதற்காக |
| 2. பிரதிக் கணக்காய்வாளர் நாயகம், வ.மா | } | தகவலிற்காக |
| 3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வ.மா | } | |